# திருத்தங்கல் நகராட்சி
## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் ஆவணி ஐப்பசி திங்கள் 14ம் நாள் **31–10–2019** ம் தேதி வியாழகிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். நாகராஜன்**

திருத்தங்கல் நகராட்சி
நாள் .26 –10–2019

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

பொருள்–376

திருத்தங்கல் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பு தினமலர் நாளிதழில் - தொழில் மலரில் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 57 நாள். 07.10.2019 தொகை ரூ.27,300/- (ரூபாய் இருபத்தி ஏழாயிரத்தி முந்நூறு மட்டும்) மேற்காண் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2283/இ1/2019

பொருள்–377

இந்நகராட்சிப் பகுதிக்குட்பட்ட சோனி மைதானத்தில் 12.09.2019-ம் தேதியன்று தொடங்கப்பெற்ற அரசுப் பொருட்காட்சி தொடர்பான விளம்பர அறிவிப்பு 12.09.2019-ம் தேதி தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 053 நாள். 12.09.2019 தொகை ரூ.20,160/- (ரூபாய் இருபத்து ஆயிரத்தி நூற்றி அறுபது மட்டும்) மேற்காண் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 199/இ1/2019

பொருள்–378

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 15 மற்றும் 16 சேடன் கிணற்று வீதி முருகையன் சந்து மற்றும் குமரன் மருத்துவமனை ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வந்த 80 mm Ac குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட படியால் மேற்காண் குழாயினை மாற்றி புதிய குடிநீர் குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.1,40,000/- (ரூபாய் ஒரு இலட்சத்தி நாற்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /இ1/2019

பொருள்–379

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.04 பாப்பன் குளம் கண்மாய் அருகில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பசுமை உரக்குடில் அமைக்கப்பட உள்ள இடத்தின் வழியாக மேற்படி நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் மெயின் குழாய் செல்கிறது. எனவே உரக்குடில் அமைக்கப்பட வேண்டி மேற்படி குடிநீர் குழாயினை அவ்விடத்திலிருந்து மாற்றி அமைத்து அப்பகுதிக்கு தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.1,65,000/- (ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /இ1/2019

பொருள்–380

திருத்தங்கல் நகராட்சி பொது நிதி 2019-2020 திட்டத்தின் கீழ் 11.10.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br><br>வார்டு எண். 21 ஸ்டாண்டர்டு காலனி நகராட்சி பூங்கா இடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குழாய் பதித்து குடிநீர் விநியோகம் செய்யும் பணி | 3.60 | P.முருகன் | 0.05% குறைவு |
| | | | M.கண்ணன் | 0.08% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **P.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 2267/இ1/2019)

பொருள்–381

திருத்தங்கல் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பு 07.10.2019-ம் தேதி தினகரன் நாளிதழில் தொழில் மலரில் KAL PUBLICATIONS என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 3300186371 நாள். 07.10.2019 தொகை ரூ.29,400/- (ரூபாய் இருபத்தி ஒன்பது ஆயிரத்தி நான்னூறு மட்டும்) மேற்காண் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2289/இ1/2019

பொருள்–382

திருத்தங்கல் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பு தினமணி நாளிதழில் 29.09.2019-ம் தேதியன்று EXPRESS UBLICATIONS (MADURAI) PRIVATE LIMITED என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். MDUTN30059162 நாள். 29.09.2019 தொகை ரூ.31,500/- (ரூபாய் முப்பத்தி ஒரு ஆயிரத்தி ஐந்நூறு மட்டும்) மேற்காண் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2282/இ1/2019

பொருள்–383

திருத்தங்கல் நகராட்சியில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் **2019** ம் ஆண்டு நடைபெற உள்ளதை தொடர்ந்து மேற்கண்ட உள்ளாட்சி தேர்தலுக்கு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ. **20, 00000/–** (ரூபாய் இருபது லட்சம் மட்டும் ) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

தேர்தல் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். **2699/2019**இ2

பொருள்–384
திருத்தங்கல் நகராட்சியில் EVP வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர் விவரம் | | |
|---|---|---|---|---|
| | | உதயம் சிஸ்டம் Educatons | CSC Educatons Service | Sri lakshmi Education Centre. |
| 1 | சிவகாசி தொகுதி – 205 திருத்தங்கல் நகராட்சியில் EVP- Electoral Verification programme Data Entry மேற்கொள்ளும் பணி. | Rs. 2.25/- | Rs. 2.75/- | Rs.3.00/- |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகளிடல் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று மன்றத்தில் பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள்–385
இந்நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கையுறை, காலுறை, ஒளிரும் சட்டை மூக்கு கவசம் மற்றும் துப்புரவு பணிக்கு தேவையான சாக்கடை கரண்டி, மண்வெட்டி, துடைப்பம், மலாராம் 4 முள் கரண்டி அரிவாள் போன்ற தளவா சாமான்கள் இருப்பு இல்லை என்பதால் தளவாட சமான்கள் பாதுகாப்பு உபகரணங்கள் ஏதேனும் ஒரு கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 7,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2464/2019/எச்1

பொருள்–386
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பெரிய ஓடை, சிறிய ஓடைகள் வாறுகால்களில் மண் அகற்றும் பணி, குப்பைகளை அகற்றும் பணிக்கு 04.10.2019 ல் ஒப்பந்தம் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. P. முருகன், ஒப்பந்தகாரர், திருத்தங்கல் - ரூ.700/-
2. M. கண்ணன், ஒப்பந்தகாரர், மதுரை - ரூ.800/-

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.முருகன், ஒப்பந்தகாரர், திருத்தங்கல் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2052/2019/எச்1

பொருள்–387
இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67L3265 மினி லாரிக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள 17.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி - ரூ.68150/-
2. வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி - ரூ.68850/-

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி என்ற நிறுவனம் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2196/2019/எச்1

பொருள்—**388**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN67AL5848 நாய்கள் பயண வாகனம் **2013**ம் ஆண்டு வாங்கப்பட்டு இதுவரை டயர்கள் மாற்றப்படவில்லை, தற்சமயம் இவ்வாகனம் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு, பொறியியல் பிரிவு விழிப்புணர்வு பணி, தேர்தல் குறித்த விழிப்புணர்வு பணி, வரி வசூல் குறித்த விழிப்புணர்வு பணி மற்றும் அரசு அவ்வப்போது அறிவிக்கும் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மேற்படி வாகனம் மூலம் நடைபெற்று வருகிறது. தற்சமயம் டயர் தேய்ந்து வருகிறது. தற்சமயம் டயர் தேய்ந்து அடிக்கடி பஞ்சர் ஆகி விழிப்புணர்வு பணி பாதிப்படைகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு **4** எண்ணம் டயர்கள் புதியது MRF டயர் மூலமாக வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **15000/—**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

விழிப்புணர்வு அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2201/2019/எச்1**

பொருள்—**389**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN67 L3265, TN67 L3267, மினி லாரிக்கு பின்பக்கம் டயர்கள் **8** எண்ணம் தேய்ந்து விட்டதால் அடிக்கடி பஞ்சர் ஆகி பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே ஏதேனும் ஒரு MRFடயர் மூலமாக பின்பக்க டயர்கள் **8** எண்ணம் வாங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. **76000/—**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2201/2019/எச்.1**

பொருள்—**390**

இந்நகராட்சியில் டெக்ஸ்கோ மூலம் மூன்று ஓட்டுனர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்சமயம் ஓட்டுனர் திரு. எஸ். ராஜன்துரை Texco No. **124594** தன்னால் பணி செய்ய இயலவில்லை ஒய்வு அளிக்குமாறு **16/10/2019**ல் கடிதம் அளித்துள்ளார். எனவே மேற்படி ஓட்டுனருக்கு பதிலாக புதிய ஓட்டுனரை நியமிக்கவும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும், டெக்ஸ்கோவில் கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.144/2013/எச்1)**

ஆணையாளர்/தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி